உலகவங்கி உதவியுடன் ஊரக ஊழியர்களுக்கான பயிற்சி மற்றும் பார்வையிடல் திட்டம்.

* வினா எண் 246—திரு. பெ. சு. திருவேங்கடம் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாட்டில் உலக வங்கி உதவியுடன் பயிற்சி மற்றும் பார்வையிடல் திட்டம் செயல்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன?

(இ) அதற்காகும் மொத்த செலவு எவ்வளவு?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: ஆம். விரிவான அறிக்கை ஒன்று பேரவை முன் * வைக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் தமிழகத்திலே எந்த எந்த மாவட்டங்களில் செயல்படுகின்றன என்பதையெல்லாம் இதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிற கால கட்டத்தின் வரையில் ஒன்றியங்களிலிருந்து இந்தத் துறையை வேளாண்மைத் துறைக்கே மாற்ற இருப்பதாக இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. வேளாண்மைத் துறையின் திட்டங்களையெல்லாம் ஊராட்சிஒன்றியங்கள் நல்ல முறையிலே செயல்படுத்தி வருகின்றன என்பது எல்லாம் அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே இந்தத் திட்டத்தை ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட முறையிலே செயல்படுத்தக்கூடாதா? அவ்வாறு செய்வதிலே என்ன சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து 3 ஊர்நல அலுவலர்கள் அதுவும் ஏற்கனவே வேளாண்மைத் தொடர்பு அலுவலர்களாகப் பயன்பட்டு கொண்டிருக்கிறவர்களை மட்டும் தான் இதிலே பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். முழுக்க முழுக்க இந்தத் துறைதான் இந்தத் திட்டத்தை செயல் டுத்திக்கொண்டு வருகிறது. மேலே இருக்கின்ற வேளாண்மை இயக்குநரிலிருந்து கீழே இருக்கின்ற விரிவாக்க அலுவலர் வரையில் இந்தத் திட்டத்திற்குப் பயன்படுத்துவதால் இந்தத் துறையே இதை மேற்கொண்டு நடத்துவது தான் சிறப்பாக இருக்கும்.

திரு. பெ. சு.. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, இந்த பயிற்சி மற்றும் பார்வையிடல் திட்டம்—விவசாயத்திலே முற்போக்கான மாநிலமாக இருக்கின்ற நம்முடைய தமிழகத்தில் வெறும் பயிற்சி மற்றும் பார்வையிடல் திட்டமாக இருந்தால் அது

* 425–427-ம் பக்கங்களில் இணைப்பு III-ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

விவசாயிகளுக்குப் பயன் தராது.—சிறு விவசாயிகளுக்கும் பெரு விவசாயிகளுக்கும் மான்ய விலையில் உரம், மருந்து போன்றவை கொடுக்கின்ற உதவியைச் செய்வதற்கான முறையிலே அரசாங்கம் ஏதாவது வழிவகை செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, வேறு திட்டங்கள் இருக்கின்றன. அவைகளின்மூலம் நாம் உதவியைச் செய்கிறோம். இந்தத் திட்டத்தின் மூலமாக வேளாண்மைத் துறையுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும், அவர்கள் பிரச்சினைகளைத் தெரிந்துகொள்ளவும் அதன் மூலம் நிவாரணம் பெற்றுத் தரவேண்டும் என்பதும் தான் இந்தத் திட்டத்தினுடைய முக்கியமான நோக்கம்.

மாமண்டூரில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை நிறுவும் திட்டம்.

*வினா எண் 247—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

மதுராந்தகம் வட்டம் மாமண்டூர் கிராமத்தில் Agro Industry மூலம் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை துவக்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, மதுராந்தகத்தில் இப்போது அதைத் துவக்கும் உத்தேசம் இல்லை.

திரு. எஸ். டி. உகம்சந்த்: தலைவர் அவர்களே, ஏற்கெனவே இதற்காக செயற்குறிப்புகள் தயாரிக்கப்பட்டு அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் மிகவும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அது மிகவும் பின்தங்கிய பகுதியாக இருப்பதால் அரசு இதை மீண்டும் பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை இயக்குவது தமிழ்நாடு வேளாண் தொழில் கழகம். அவர்கள் இத்தகைய தொழிற்சாலைகள் போச்சம் பள்ளியிலும், நாமக்கல்லிலும் இருக்கின்றன. புதுக்கோட்டை மாவட்டத்திலே பூனக்குளத்திலே வேலை முடிவு அடையும் தறுவாயில் ஒன்று இருக்கின்றது. ஆகவே மதுராந்தகத்தில் துவக்கத் தேவையில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள்.

பருத்தி தீவிர சாகுபடித் திட்டம்.

*வினா எண் 248—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பருத்தி தீவிர சாகுபடித் திட்டம் தற்போது அமுலில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இதற்காக 1981–1982 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு?